Legislation to regulate fishing

* 707 *Q.*—THIRU N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state—

whether the Central Government had recently circulated to the State Government the draft of the bill proposed to be brought about by the Government of India to regulate fishing?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : ஆம்.

திரு. என். கே. பழனிசாமி : அமைச்சர் அவர்கள் அந்தத் திட்டத்தின் விவரம் என்ன என்று அறிவிப்பார்களா? இன்னும் அதிக தூரம் போய் மீன் பிடிக்க வழிவகை செய்யும் சிபார்சை செய்வார்களா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : மத்திய அரசு ஒரு சட்ட வரைவினைத் தயாரித்து மாநில அரசின் ஒப்புதலுக்கு அனுப்பினார்கள். நாம் அதை அப்படியே ஒத்துக்கொண்டு அனுப்பியிருக்கிறோம். அந்த மசோதா பாராளுமன்றத்தில் நிறைவேறிய பிறகுதான் அதன் விவரங்களைக் கூற வாய்ப்பு இருக்கும். எல்லைகளை வகுப்பது, அந்த எல்லைகளுக்குள் என்னென்ன படகுகள் போகலாம் என்று வரையறுப்பது, யாரும் மீறாமல் இருக்க மீன் துறைக்கும், போலீஸ் துறைக்கும் அதிகாரம் கொடுப்பது ஆக இதுபோன்ற கருத்துக்கள் அடங்கிய மசோதாவைத்தான் அவர்கள் தயார் செய்திருக்கிறார்கள்.

திரு. ஏ. எம். இராஜா : இராமேசுவரம் மீனவர்கள். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது மத்திய அரசாங்கத்தின் சட்ட முன்வடிவைப் பற்றியது.

திரு. ஏ. எம். இராஜா : மெகனைஸ்டு போட்டில் நமது மீனவர்கள் போகிறபோது சிலோன் ரோந்துக்காரர்கள் அவர்களைப் பிடித்துக்கொண்டு போய் போட்டுக்குச் சேதத்தை விளைவிப்பதும், அவர்களை க்வாரண்டைனில் போடுவதுமான தொல்லைகள் இருக்கின்றனவே. இதை மத்திய அரசுக்கு நம் அரசு எழுதி இதுபோன்ற காரியங்கள் நடைபெறாமல் தடுக்க முன் வருவார்களா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : இப்போது 12 மைல்களுக்கு அப்பால் யார் வேண்டுமானாலும் போகலாம். ஐந்து மைல்களுக்குள் கட்டுமரத்தில் மீன் பிடிப்பவர்கள் மீன் பிடிக்க

1974 ஏப்ரல் 2]

வேண்டும். இந்த ஐந்து மைல்களுக்குள் மீன் பிடிக்காது—அதற்கு அப்பால் போய் விசைப்படகுக்காரர்கள் மீன் பிடிக்க வேண்டும். இந்த விதிமுறைகளை இருசாராருமே மீறுகிறார்கள்—அதனால் மோதல்கள் ஏற்படுகின்றன. இதை எல்லாம் தடுக்கத் தான் புதிய மசோதா வருகிறது.

திரு. க. உரோ. எட்மண்ட் : பொதுவாக கடலோரப் பகுதிகளில் இருக்கிற நெருக்கடியான சூழ்நிலையை உத்தேசித்து இந்த மசோதாவை கூடிய சீக்கிரம் நிறைவேற்ற மத்திய சர்க்காரை நம் அரசு வற்புறுத்துமா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : மத்திய அரசே தான் மாநில அரசின் ஒப்புதலுக்கு அந்த மசோதாவை அனுப்பி வைத்தது. நாமும் அதை அப்படியே ஏற்று, உடனடியாக நிறைவேற்ற வேண்டும் என்று அனுப்பியிருக்கிறோம்.

திரு. என். கே. பழனிசாமி: கச்சத்தீவு 12 மைல்களுக்குள் தான் இருக்கிறது. அங்கு போகின்றவர்களைக் கூட கைது செய்கிறார்களே, அதைத் தடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : ஐந்து மைல்கள் வரை கட்டுமரங்கள் செல்லலாம். ஐந்து மைல்களுக்கு அப்பால் தான் விசைப்படகுகள் செல்லலாம். 12 மைல்களுக்கு அப்பால் யார் வேண்டுமானாலும் சென்று மீன் பிடிக்கலாம். இன்றைக்கு ஜப்பான், ரஷ்யா போன்ற நாடுகளின் படகுகள் எல்லாம் கூட வந்து பிடிக்கின்றன. மாநில சர்க்காரால் அதைத் தடுக்க முடியாது. மத்திய அரசுதான் மற்ற நாடுகளுடன் ஒப்பந்தம் செய்துகொண்டு எல்லையை வரையறுக்க முடியும். கட்டுமரக்காரர்களும், விசைப் படகுக்காரர்களும் ஒருவருக்கொருவர் எல்லை மீறுகிறபோது கூட மோதல்கள் ஏற்பட்டு, கலகம் ஏற்படுகிறது. எல்லைகளைக் குறிக்க அங்கங்கே கட்டைகள் மிதக்கவிடப்பட்டும் வருகிறது. போலீஸ் ரோந்து கோஷ்டிக்காரர்களும் சென்று பார்க்கிறார்கள். மத்திய அரசு சட்டம் வந்தால் இந்தப் பிரச்சினைகளை ஓரளவு கட்டுப்படுத்தலாம்.

திரு. எம். தேவாசன் : இலங்கை அரசிடம் மாரிடைம் பெல்ட் அதிகமாக இருப்பதால், நம்மிடமும் அந்த அளவுக்கு அதிகமாக மாரிடைம் பெல்டை ஏற்படுத்த அரசு முன்வந்தால் பல சங்கடங்கள் ஏற்படாது, அதை அரசு செய்யுமா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : இலங்கை படகுகள் மட்டுமல்ல, நான் முன்பு சொன்னதுபோல, ஜப்பான், ரஷ்யப் படகுகள் கூட இங்கே மீன் பிடிக்க வருகின்றன. அதை எல்லாம் மாநில அளவில் தடுக்க முடியாது. மத்திய அரசுதான் இந்தச் சட்டத்தை நிறைவேற்றி, அந்நிய நாடுகளுடன் ஒப்பந்தம் செய்துகொண்டு—கடலில் எல்லைகளை வரையறுக்க வேண்டும். நம்மால் அதை எல்லாம் தடுக்க முடியாது.

சேலத்தில் புறச்சாலை அமைப்பு

*708 வினா—**திரு. கி. ஜெயராமன் :** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சேலம் புறச்சாலை அமைப்புத் திட்டம் எப்போது செயல் படுத்தப்படவிருக்கிறது ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : வேலை சீக்கிரம் எடுத்துக் கொள்ளப்படும். அது 1975-ம் ஆண்டு மார்ச் இறுதிக்குள் முடிவடையலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. கி. ஜெயராமன் : நகர எல்லையின் மதிப்பீடு என்ன ?

மாண்புமிகு திரு. ப. உ சண்முகம் : நகர எல்லையின் மதிப்பீடு என்னிடத்தில் இல்லை. நில ஆர்ஜிதத்திற்காக மட்டும் ரூ. 19,71,700 மதிப்பீடு. நில ஆர்ஜிதத்தோடு புறச்சாலை அமைக்கும் பணியின் திட்ட மதிப்பீடு, ரூ. 34,27,700 ஆகும்.

மானாமதுரை ஒன்றியத்திலுள்ள புதுக்கோட்டை சாலை

*709 வினா—**திரு. த. சோனையா :** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், மானாமதுரை ஊராட்சி ஒன்றியம், தென் புதுக்கோட்டைக்குத் தார்ச் சாலை போடும் திட்டம் அரசிடம் உண்டா ?

(இ) ஆம் எனில், மொத்த மதிப்பீடு எவ்வளவு ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.